இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 251 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 09 – புதன்கிழமை 22 ஏப்ரல் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 251 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 09 - Wednesday 22 April 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடும்

# பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி தமிழ்நாட்டுக்குப் பேராபத்து!

## "டெக்கான் ஹெரால்டு" ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி!

**சென்னை, ஏப்.22-**

**"வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக் கட்டை போடும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி தமிழ் நாட்டுக்குப் பேராபத்து" என 'டெக்கான் ஹெரால்டு' ஆங்கில நாளேட்டிற்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**டெக்கான் ஹெரால்டு ஆங்கில நாளேட்டுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த சிறப்புப் பேட்டி வருமாறு:-**



'We crushed BJP's attempts to reduce south's political representation'

MK Stalin has criss-crossed Tamil Nadu on the campaign trail since March 31. The chief minister steps off his van to address crowds, and spends mornings at markets gauging the election pulse—hoping to make history by returning the DMK to power for a consecutive second term, the first since 1972. In an interview with *DH*'s **E T B Sivapriyan**, Stalin discussed his government's performance, the BJP, AIADMK, delimitation, and why he framed the April 23 elections as Tamil Nadu versus the NDA. Excerpts:

**You have projected the 2026 Assembly elections as a battle between Tamil Nadu and the NDA. Does this mean you are acknowledging the BJP's growth in Tamil Nadu, or merely tapping into the anti-BJP sentiments prevailing in the state for votes?**

The BJP has not grown in Tamil Nadu; it can never grow here. Frustrated that it cannot come to power, the BJP is riding on the back of the AIADMK to capture power through the back door. We have taken up the 'TN vs NDA' campaign only to tear off the BJP's AIADMK mask.

The BJP-led Union government is trying to snatch the political rights of southern states. We stood firm and crushed its attempts to reduce our political representation. But it was the AIADMK that stabbed the people of Tamil Nadu in the back by supporting the move. That is why we have framed this election as Tamil Nadu vs Delhi.

**The DMK-led Secular Progressive Alliance has won three consecutive general elections. Yet you are expanding the alliance. Is this because you want to neutralise anti-incumbency votes against your government, or because the contest has turned into a four-cornered one?**

We have won every election since 2019 with massive public support, and the five-year Dravidian model of governance has only strengthened it. There is a pro-incumbency wave in Tamil Nadu, and we will confidently secure over 200 seats.

**The AIADMK has cobbled together a coalition. Why do you describe the contest as multi-cornered? Who are the principal contenders?**

I would like to correct you — they are not a strong alliance. They have been repeatedly rejected by the people. As I have already said, this election pits the team protecting Tamil Nadu's rights and future against the Delhi team trying to turn everyone into puppets.

**Prime Minister Narendra Modi and BJP leaders speak of a double-engine sarkar in Tamil Nadu. Even AIADMK leaders talk about it.**

Tamil Nadu already has a super-fast engine. It has posted growth that even so-called double-engine states have never achieved.

**Despite your government's success in several sectors, Opposition parties allege that you have not fulfilled several promises made in the run-up to the 2021 election.**

Which Opposition is saying that? Is it the BJP, which came to power in 2014 by cheating people with the promise of transferring Rs 15 lakh into every citizen's bank account? Or the AIADMK, which did not even fulfil 10% of the promises it made in 2016? We have implemented schemes not only from our manifesto but also those that were never promised. No government in the past has delivered as much as ours.

**The ED and other central agencies have filed cases against your Cabinet colleagues. Is it fair to view them only through the prism of the BJP's vendetta politics?**

It is not only the DMK that says the ED acts at the whims and fancies of the BJP; courts themselves have passed strictures against the agency. Many politicians in the north who were investigated by the ED have been declared clean after joining the BJP's washing machine. Either the cases against them have been dropped, or they are now called saints. People see the ED as one of the BJP's wings, with its only job being to crush the Opposition.



**செய்தியாளர்:** *கடந்த ஐந்து ஆண்டு களில் உங்கள் அரசின் செயல்திறனை நீங்கள் எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எல்லார்க்கும் எல்லாம் என்ற நோக்கோடு ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினோம். எங்களின் ஆட்சியை நாங்கள் மதிப்பிடுவதை விட பொதுமக்களில் ஒருவர் கூறியதை நினைவு கூறுகிறேன். 2021 இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த போது நான் கூறியது 'எங்களுக்கு வாக்களிக்காத மக்களும் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறி விட்டோமே' என எண்ணும் வகையில் சிறப்பான ஆட்சியைத் தருவோம் என்றேன். சில வாரங்களுக்கு முன்பு திராவிட மாடல் அரசின் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணம், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் பட்டியலிட்டவர் கடந்த முறை தி.மு.க.விற்கு வாக்களிக்காமல் தவறிவிட்டேன் ஆனால் இந்த முறை தி.மு.க.விற்கு தான் வாக்களிப்பேன் என வீடியோ பதிவிட்டிருந்தார். இதைவிட வேறு என்ன மதிப்பீடு வேண்டும். ஒருவரும் பின்தங்கி விடக் கூடாது என பார்த்து பார்த்துத் திட்டங்கள் வகுத்து செயல்பட்டுள்ளோம். அதனால் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளோம்.

### கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூ.2000 – 8ஆம் வகுப்பு வரை காலை உணவுத் திட்டம்!

எண்ணற்ற திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி இருந்தாலும் ஒன்றல்ல இரண்டு திட்டங்கள் என் மனதிற்கு நெருக்கமான திட்டங்கள். ஒன்று மகளிர் உரிமைத் தொகை திட்டம். அடுத்து அமையும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இத்தொகையை ரூ.2000 ஆக உயர்த்த உள்ளோம். மற்றொரு முக்கியமான திட்டம் பள்ளிக் குழந்தைகளின் பசியாற்றும் காலை உணவுத் திட்டம். தனிப்பட்ட முறையில் இது என் மனதிற்கு நெருக்கமான திட்டம் மட்டுமல்ல இதயத்தில் இடம்பெற்ற திட்டமும் கூட. அடுத்து அமையும் ஆட்சியில் 8ஆம் வகுப்பு வரை இந்த திட்டத்தை விரிவுபடுத்த உள்ளோம்.

### தமிழ்நாட்டு மக்கள் முதுகில் குத்தும் அ.தி.மு.க.!

**செய்தியாளர் :** *2026 சட்டமன்றத் தேர்தலை தமிழ்நாடு மற்றும் NDA இடையேயான போராட்டமாக நீங்கள் முன்னிறுத்தியுள்ளீர்கள். இதனால் தமிழ்நாட்டில் BJP வளர்ச்சியை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா அல்லது மாநிலத்தில் நிலவும் எதிர்ப்பு உணர்வுகளை வாக்குகளாகப் பெற முயற்சிக்கிறீர்களா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளரவில்லை; இங்கு வளரவும் முடியாது. தான் நேரடியாக வர இயலாத விரக்தியில் அ.தி.மு.க.வின் முதுகில் ஏறிக் கொண்டு கொல்லைப்புறமாக வர பா.ஜ.க முயல்கிறது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. முகமூடி அணிந்த படி வந்திருக்கும் பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழிக்கவே இந்த பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளோம். இதோ இப்போது கூட தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் அரசியல் உரிமையைப் பறித்து அடிமையாக்கும் முயற்சியை முன்னெடுத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு, தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் வலுவாக எதிர்த்து நின்று அந்த ஆபத்தை முறியடித்தோம். ஆனால் அ.தி.மு.க. தமிழ்நாட்டிற்குப் பேராபத்து விளைவிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாட்டு மக்களின் முதுகில் குத்தியது. அதனால் தான் இந்த தேர்தலை தமிழ்நாடு Vs டெல்லி என்கிறோம்.

**செய்தியாளர் :** *தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தொடர்ந்து மூன்று பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளது. இதற்குப் பிறகும் கூட்டணியை விரிவுபடுத்தியது ஏன்? உங்கள் அரசுக்கு எதிரான எதிர்ப்பு வாக்குகளை சமநிலைப்படுத்தவா அல்லது நான்கு முனைப் போட்டியாக மாறுவதாலா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 2019 இல் இருந்து தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று வென்று வருகிறோம். இந்த ஐந்துவருட திராவிட மாடல் ஆட்சியால் அந்த ஆதரவு இன்னும் கூடியுள்ளதால் எங்களது ஆட்சிக்கும் கூட்டணிக்கும் ஆதரவான அலை வீசுகிறது. மக்கள் ஆதரவுடன் 200 தொகுதிகளுக்கு மேல் உறுதியாக வெல்வோம்.

### பலமுறை தோற்கடிக்கப்பட்ட கூட்டணி!

**செய்தியாளர் :** *ஒரு பலம்வாய்ந்த கூட்டணியை அ.தி.மு.க. கட்டமைத்துள்ளது. அது பற்றிய உங்கள் கருத்து என்ன? பல முனை போட்டியை எப்படி பார்க்கிறீர்கள்? பிரதான போட்டி யாருக்கிடையில்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** திருத்தம். அவர்கள் பலம் வாய்ந்த கூட்டணி அல்ல. பலமுறை தமிழ்நாட்டு மக்களால் தோற்கடிக்கபட்ட கூட்டணி. இந்த தேர்தல் தமிழ்நாட்டின் உரிமையையும் எதிர்கால நலனையும் பாதுகாக்கும் தமிழ்நாடு அணிக்கும் , தமிழ்நாட்டைக் கைப்பற்றி தனது கைப்பாவையாக மாற்றத் துடிக்கும் டெல்லி அணிக்குமான தேர்தல் என்று ஏற்கனவே கூறி விட்டேன்.

### டபுள் எஞ்சின் என்ற டப்பா எஞ்சின் தேவையில்லை!

**செய்தியாளர் :** *பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பா.ஜ.க. தலைவர்கள் தமிழ்நாட்டில் "இரட்டை எஞ்சின் அரசு" பற்றி பேசுகின்றனர். அ.தி.மு.க. தலைவர்களும் அதைப் பேசுகின்றனர். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? இப்படிப்பட்ட நிலையில் இது ஜனநாயகத்தில் சரியானதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** டபுள் எஞ்சின் சர்க்கார் என்று சொல்லக்கூடிய மாநிலங்களை விட சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சினாக விளங்கும் திராவிட மாடல் அரசில் தமிழ்நாடு அதிக வளர்ச்சி கண்டிருக்கிறது. நீங்கள் சுட்டிக்காட்டும் "டபுள் எஞ்சின் சர்க்கார்" மாநிலங்கள் வளர்ச்சியில் கடைசி இடத்தில் உள்ளன. மத வன்முறைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் எல்லாம் முதல் இடத்தில் உள்ளன. டபுள் எஞ்சின் என்ற டப்பா எஞ்சின் எங்களுக்குத் தேவையில்லை என தமிழ்நாட்டு மக்கள் நிராகரித்து விடுவார்கள்.

### இவர்கள் வாக்குறுதிகள் பற்றிப் பேசலாமா?

**செய்தியாளர் :** *பல துறைகளில் உங்கள் அரசு வெற்றி பெற்றிருந்தாலும், 2021 தேர்தலுக்கு முன் மக்களிடம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. இதற்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எந்த எதிர்க்கட்சி அப்படி கூறுவது, ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் போடுவோம் என பிரச்சாரம் செய்து மக்களை ஏமாற்றி 2014 இல் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வா? 2016 இல் கொடுத்த வாக்குறுதிகளில் 10% கூட நிறைவேற்றாமல் தமிழ்நாட்டின் உரிமைகளையும் டெல்லியிடம் அடகுவைத்த அ.தி.மு.க.வா.? இவர்களுக்கு வாக்குறுதிகள் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

இதுவரை அரசியல் வரலாற்றில் எந்த அரசும் நிறைவேற்றிடாத வகையில் தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமின்றி சொல்லாத திட்டங்களான காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் உள்ளிட்டவைகளையும் நிறைவேற்றிய அரசுதான் திராவிட மாடல் அரசு! ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒத்துழையாமையை, நிதி தராத அடாவடியை மீறி இந்த சாதனைகளை நாங்கள் செய்திருக்கிறோம். நாங்கள் சொன்னதையும் செய்வோம். சொல்லாததையும் செய்வோம். அதனால்தான் இப்போது நாங்கள் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை சூப்பர்ஸ்டாராக தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பவனி வருகிறது.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்தான் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறி!

**செய்தியாளர் :** *தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார். அது மட்டுமின்றி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்படவில்லை என்கிற குற்றச் சாட்டும் உள்ளது. இதுகுறித்து உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** பிரதமர் மணிப்பூரை மறந்து விட்டுப் பேசுகிறார். பெண்கள் பாதுகாப்பு பற்றிப் பேச பா.ஜ.க.வினருக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. மணிப்பூரில் அங்கு ஆட்சி செய்த பா.ஜ.க. அரசால் தூண்டி விடப்பட்ட வன்முறையின் போது பெண்களுக்கு நேர்ந்த கொடுமை, காஷ்மீர் சிறுமி பாலியல் வன்கொடுமை, ஒலிம்பிக்கில் பதக்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு நேர்ந்த பாலியல் துன்புறுத்தல், உத்தரபிரதேசத்தில் இப்போது கூட உச்சநீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்ட பாலியல் வன்கொடுமை என பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்தான் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கிறது. அவற்றையெல்லாம் பிரதமரின் கவனத்திற்கு உங்களைப் போன்ற ஊடகங்கள் கொண்டு சென்று "தமிழ்நாட்டின் மீது அபாண்டமாக குற்றம் சாட்டுவது ஏன்" என்று கேள்வி கேட்க வேண்டும். பெண்கள் பாதுகாப்பிலும், சட்டம் ஒழுங்கிலும் தமிழ்நாடு பா.ஜ.க. மாநிலங்களை விட முதன்மை மாநிலமாக உள்ளது என்பதுதான் உண்மை!

### மக்கள் நலத்திட்டங்கள் – உள்ளூர் பொருளாதாரம் வலுவடையவே செய்யும்!

**செய்தியாளர்:** *தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தால் மேலும் பல திட்டங்களை நிறைவேற்றப் போவதாக நீங்கள் வாக்குறுதி அளித்துள்ளீர்கள். அவற்றை செயல்படுத்த அரசுக்கு போதுமான நிதி உள்ளதா? கடந்த ஐந்து ஆண்டுகளில் தி.மு.க. அரசு மட்டும் 5 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது. மேலும் கடன் எடுப்பது அரசுக்கு சுமையாக மாறாதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கடனாளி மாநிலமாக விட்டுச்சென்றது கடந்த அ.தி.மு.க. ஆட்சி. நான்காண்டு காலம் பா.ஜ.க.வின் முகமூடியாக அ.தி.மு.க. ஆட்சி நடத்திய போதே இப்படி கடன் வாங்கி விட்டு நிதி மேலாண்மையை அடியோடு சீரழித்து விட்டுப் போனார்கள். தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் பொருளாதார ஆலோசனைக் குழு அமைத்து அ.தி.மு.க. ஆட்சியின் நிதி சீர்கேடு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட்டு கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு நிதி நிலையை சீராக்கியிருக்கிறோம். ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாரபட்ச GST நிதி பங்கீடு, கல்வி நிதி, குடிநீர் திட்ட நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, வளர்ச்சி திட்ட நிதி என எந்த ஒரு நிதியையும் வழங்காமல் வஞ்சித்த போதும் தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்கி 11.19% வளர்ச்சி விகிதத்துடன் No.1 மாநிலமாக உயர்த்தி உள்ளோம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட 16% அதிகரித்துள்ளோம். தமிழ்நாட்டின் பொருளாதாரம் 30 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்துள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் அளவு உயர்த்த இலக்கு நிர்ணயித்து பணியாற்றி வருகிறோம். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடனை விட குறைந்த விகிதத்தில்தான் இப்போது கடன் வாங்கப்பட்டுள்ளது . அ.தி.மு.க. ஆட்சியில் எந்த நலத் திட்டங்களும் வழங்காமலேயே கடன் அளவு கடுமையாக அதிகரித்தது. ஆனால் எங்களது ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் உள்ளிட்ட நலத்திட்டங்களும் அடிப்படை கட்டமைப்புகளும் செயல்படுத்தி வருகின்ற போதும் கடன் அளவை கட்டுக்குள் வைத்துள்ளோம்.

எனவே மக்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதால் எந்த பொருளாதார நெருக்கடியும் உருவாகாது. மக்களுக்கான நலத்திட்டங்கள் என்பது ஒன்றிய பா.ஜ.க. அரசு கார்பரேட்களின் பல லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்ததே அதுபோல அல்ல. மக்கள் நலத்திட்டங்கள் சமூக முதலீடுகள் அவை உள்ளூர்ப் பொருளாதாரத்தை வலுவடையவே செய்யும்.

### எதையும் தேர்தலுக்காக செய்வதில்லை!

**செய்தியாளர் :** *நேரடி நன்மை பரிமாற்றம் (Direct Benefit Transfer) மக்களுக்கு உதவுகிறது. ஆனால் அரசியல் கட்சிகள் அதை தேர்தலில் வெற்றி பெற ஆயுதமாக பயன்படுத்துவது சரியா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அதை தேர்தல் ஆயுதமாகப் பயன்படுத்தியது ஒன்றிய பா.ஜ.க. அரசுதான். பீகார் தேர்தலின் போது அதை செய்தனர். நாங்கள் எதையும் தேர்தலுக்காக செய்வதில்லை. ஏற்கனவே நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கும் உரிமைத் தொகை திட்டத்தைக் கூட சதி செய்து நிறுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசும் அதன் அடிமைக் கூட்டணியும் முயன்றது. அப்படி உரிமைத் தொகை திடீரென நிறுத்தப்பட்டால் அதை எதிர்பார்த்திருக்கும் 1.31 கோடி குடும்பங்கள் பாதிக்கப்படும். ஆகவே தான் நாங்கள் உரிமைத் தொகையை முன் கூட்டியே வழங்கினோம். இதில் அரசியலும் இல்லை. ஆயுதமும் இல்லை. மகளிரின் மேம்பாடே மேலோங்கி நிற்கிறது.

### அமலாக்கத் துறையின் லட்சணம்!

**செய்தியாளர் :** *புலனாய்வு மற்றும் பிற மத்திய அமைப்புகள் உங்கள் அமைச்சர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்துள்ளன. அவற்றை பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியலாக மட்டுமே பார்ப்பது நியாயமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அமலாக்கத்துறை பா.ஜ.க.வின் ஏவல் துறையாக செயல்படுவதை நாங்கள் மட்டும் குறிப்பிடவில்லை. பல சமயங்களில் நீதிமன்றங்களே அதை உறுதி செய்யும் வகையில் அமலாக்கத்துறைக்கு கண்டனங்களை பதிவு செய்திருக்கின்றன.

வட இந்தியாவில் அமலாக்கத்துறை விசாரணைக்கு உட்பட்ட பல அரசியல் கட்சியினரும் இன்று பா.ஜ.க.வோடு கைகோர்த்து வாஷிங் மெஷினில் விழுந்த பிறகு ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அல்லது புனிதர்களாக்கப்பட்டுள்ளார்கள். அப்படியும் இல்லை என்றால் எதிர்கால கூட்டணிக்காக "வழக்குகள் கிடப்பில்" போடப்பட்டுள்ளது! இதுதான் பா.ஜ.க. ஆட்சியில் அமலாக்கத் துறையின் சுதந்திரம்! முழுக்க முழுக்க பா.ஜ.க.வின் IT விங் போல Edwing ஆக அமலாக்கத் துறை செயல்பட்டு எதிர்க்கட்சிகளை முடக்க முயல்கிறது என்பதுதான் மக்களின் பார்வை! அதனால்தான் அமலாக்கத்துறையின் நடவடிக்கைகளை "திரைக்கதை வசனம் பா.ஜ.க. இயக்குவது அமலாக்கத்துறை" என நாடே கூறுகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

### அ.தி.மு.க. முகமூடி போட்டுக்கொண்டிருக்கும்

## பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்தெறிவோம்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஒருபோதும் வளரவே வளராது. இந்நிலையில், தமிழ்நாட்டிற்கும் என்.டி.ஏ.வுக்கும் இடையே போட்டி என்கிற பரப்புரையை மேற்கொண்டிருப்பது, அ.தி.மு.க. முகமூடியை போட்டுக் கொண்டிருக்கும் பா.ஜ.க.வின் முகத்திரையை கிழிப்பதற்காகத்தான். அவர்கள் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டு மக்களால் புறக்கணிக்கப்படுவார்கள்.

தமிழ்நாட்டில் எங்களுக்கு ஆதரவான அலை வீசுவதால், நிச்சயம் நாங்கள் மக்களின் பேராதரவுடன் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு குறிப்பிட்ட கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இது தொடர்பாக டெக்கான் ஹெரால்டி-ல் வெளியான அவரது பேட்டியை இணைத்துள்ளார்.